FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102154

1. District : மாவட்டம் Thanjavur PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 3/25 Date: நாள் 02.06.2025

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7 of PC Act

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 28.05.2025 12.30hrs Date to : நாள் வரை 30.05.2025 16.25hrs

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.06.2025 Time : நேரம் 0800 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் FIR Registered at 05.00hrs on 02.06.2025

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தோப்புத்தெரு VAO அலுவலகம் திருவோணம் தாலுகா, தஞ்சாவூர். சுமார் 45 km தெற்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. துரைராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. பழனியப்பன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 22/25 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் -

(g) Address : முகவரி 176, அம்மன்கோவில் கீழ்கரை தெரு, உள்ளிய விடுதி (PO) திருவோணம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தி. துரைசேகர், கிராம நிர்வாக அலுவலர், தோப்புவிடுதி, தஞ்சாவூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமின்மை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Padmavathi 2/6/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
P. Kumaran.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.06.2025 / 12:15 hrs

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Inspector of Police, No. எண்
VAC, Kanjanur.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பரிவு குற்ற எண்.03/2025, ச/பி 7 of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) முதல் தகவல் அறிக்கையின் காலம்–12இன் தொடர்ச்சி</u>

பணிந்து சமர்ப்பிக்கிறேன்:– தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் இன்று 02/06/2025 ஆம் தேதி காலை 08.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தஞ்சாவூர், திருவோணம் தாலுக்கா, உஞ்சியவிடுதி (Post), அம்மன்குடி, 176, கள்ளர் தெரு, என்ற முகவரியில் வசித்துவரும் திரு.M.பழனியப்பன், என்பவரது மகன் திருP.குமரேசன் வயது 22/2025 என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், P.குமரேசன், வயது 22/2025, த/பெ.M.பழனியப்பன், 176, கள்ளர் தெரு, அம்மன்குடி, உஞ்சியவிடுதி (Post), திருவோணம் தாலுக்கா, தஞ்சாவூர். செல்: 93443 98986, பெறுதல், மதிப்பிற்குரிய. காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, தஞ்சாவூர். அய்யா, வணக்கம், நான் திருவோணம் அருகில் உள்ள அம்மன்குடி எனும் கிராமத்தில் என் பெற்றோருடன் வசித்து வருகிறேன். எனக்கு ஒரு அக்கா, ஒரு அண்ணன் உள்ளனர், அக்கா அனிதா திருமணமாகி புதுவிடுதி வெட்டுவாக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறார். எனது அண்ணன் P.அருள்நாத் கோவையில் பத்மநாபன் இன்ஜினியரிங் கம்பெனியில் டிரைவராக வேலை பார்த்து வருகிறார், எனது அண்ணன் திரு.P.அருள்நாத் கடந்த 2017 ஆம் ஆண்டு தோப்புவிடுதி கிராமத்தைச் சேர்ந்த திரு.கலியபெருமாள் என்பவரிடமிருந்து சர்வே எண்.102/3A5ல் உள்ள 32 சென்ட் அளவுள்ள புஞ்சை நிலத்தினை கிரையத்தில் வாங்கி திருவோணம் சார்பதிவாளர் அலுவலத்தில் ஆவண எண்.602/2017 ஆக பத்திரப்பதிவு செய்யப்பட்டது. அதன்படி அந்த நிலத்திற்கு பட்டா எண்.1358ன்படி திரு.கலியபெருமாள் மற்றும் எனது அண்ணன் அருள்நாத் பெயரும் கூட்டுப்பட்டாவாக உள்ளது. எனவே, எனது அண்ணன் சொன்னதன்பேரில் அந்த இடத்திற்கு நான் கடந்த 26.05.2025 அன்று என் அண்ணன் பெயரில் பத்திரப்பதிவு செய்யப்பட்ட இடத்திற்கு தனிப்பட்டா கேட்டு எனது செல்போன் எண் (93443 98986) கொடுத்து ஆன்லைனில் விண்ணப்பித்தேன். பின்னர், இரண்டு நாட்கள் கழித்து 28.05.2025 அன்று சுமார் 11.30 மணிக்கு தோப்புவிடுதி கிராம நிர்வாக அலுவலர் திரு.முருகேசன் அவர்கள் என்னை செல்போனில் தொடர்புகொண்டு நீங்கள் அருள்நாத் தானே பட்டாவுக்கு அப்ளை பண்ணியிருக்கீங்களா என்று கேட்டார். நான் அது எனது அண்ணன், அவருக்காக நான் எனது செல்போன் எண் கொடுத்து விண்ணப்பித்துள்ளேன் என கூறினேன். அவர் சரி உங்களிடம் உள்ள அசல் ஆவணங்களை எடுத்துக்கொண்டு VAO ஆபீஸ் வந்து பாருங்கள் என்று சொன்னதால் அன்றைய தினமே சுமார் 12.30 மணியளவில் அவரை நேரில் சந்தித்து ஆவணங்களை கொடுத்தேன், அவர் அவற்றை பார்த்துவிட்டு எல்லாம் சரியாக உள்ளது, தனிப்பட்டா வேலைகளை நான் பார்த்துக்கிறேன், உங்க இடத்தை வந்து அளந்து பார்க்கனும், அதற்கு 5,000/– ரூபாய் செலவாகும் என்று கூறினார். நான்

சிறிது நேரம் கழித்து எனது அண்ணனுக்கு போன் செய்து VAO விடம் கொடுத்து பேசசொன்னேன், அவர்கள் இருவரும் பேசிக்கொண்டனர், பின்னர் என் அண்ணன் என்னிடம் பட்டாமாற்றத்திற்கு VAO ரூபாய்.5,000/- பணம் கேட்கிறார் என்று சொன்னார். பின்னர், மறுநாள் நான் மீண்டும் VAO சாரை பார்த்து தனிப்பட்டா குறித்து கேட்டபோது, நீ பணத்தை கொண்டு வா தம்பி, உடனே வேலையை முடிச்சித்தரேன் என்றும் பணம் கொடுக்கலைன்னா பட்டாமாற்றம் பெண்டிங் ஆகிடும் என்றும் கூறினார். நான் என் அண்ணன் அருள்நாத்திடம் பேசிட்டு வரேன் சார்ன்னு சொன்னதற்கு, அய்யா முதல்ல பணத்தை ரெடி பண்ணுங்க, நான் வேலையை முடிச்சு தரேன்னு கறாராக சொல்லி அனுப்பிவிட்டார். பின்னர் வெள்ளிக்கிழமை (30.05.2025) மாலை சுமார் 04.25 மணியளவில் VAO முருகேசன் என்னிடம் செல்போனில் பேசி உங்க இடத்தைப் பார்க்க வரேன், பணம் ரெடி பண்ணிட்டீங்களா என்று கேட்டார், நான் அண்ணனுக்கு இன்னும் சம்பளம் வரல, நான் அவரிடம் கேட்கவேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் பணம் ரெடிபண்ணிட்டு சொல்லுங்கன்னு சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். ஆனால், அவர் அன்றைக்கு இடத்தை வந்து பார்க்கவில்லை, நான் இதுகுறித்து எனது அண்ணனிடம் பேசியபோது அவர் பணம் எல்லாம் கொடுக்கவேண்டாம், லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் கொடு என்றும் சொன்னார். எனக்கும் VAO திரு.முருகேசன் கேட்ட லஞ்சப்பணத்தை கொடுக்க விருப்பமில்லை, எனவே தனிப்பட்டா தருவதற்கு என்னிடம் ரூபாய்.5,000/- லஞ்சம் கேட்ட தோப்புவிடுதி கிராம VAO திரு.முருகேசன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்டாவிற்கு இணையத்தில் விண்ணப்பித்த நகல் மற்றும் பத்திர நகல் ஆகியவற்றை இந்த மனுவுடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு Sd- P.குமரேசன், 02.06.2025. மேற்படி புகாரைப் பெற்று, புகாரின் உண்மைத்தன்மையை உறுதி செய்தும், புகாரின் பேரில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்: 03/2025 U/s 7 of Prevention of Corruption Act, 1988 (as amended in 2018)-ன்படி 02.06.2025 ஆம் தேதி 09.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (ஒப்பம்). P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு தஞ்சாவூர். அம்மா, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவைகளை கனம் கும்கோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் நகல் ஒன்று அலுவலக கோப்பில் விசாரணைக்கும் வைத்தேன்.

(P.பத்மாவதி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு (ம) கண்காணிப்புப் பிரிவு,
தஞ்சாவூர்.